சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை .. திரு.R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.
2022 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண். 1/2020
இன்
முதலேற்பு வழக்கு எண்.46/2012
(CNR No .. TNVR09-000089-2012)

பெருமாள்சாமி ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

1. பாலாஜி
2. முரளிதரன் ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
(2ம் மனுதாரருக்காக மேற்படியாரின் பவர் ஏஜெண்ட் 1ம் மனுதாரர் மூலம்)
3. ஜெயபாரதி
4. வளர்மதி
5. கோதையம்மாள் ... 3,4,5 எதிர்மனுதாரர்கள்/2,3,4 பிரதிவாதிகள்
6. சத்தியராம்
7. தேவிகா
8. அபிநயா
9. விஸ்வராஜ் (எ) நம்பி
10. ஞானசெல்வி
11. அலமேலுமங்கைத்தாயார்
12. ஆனந்தசெல்வி ... 6 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/சேர்க்கப்பட வேண்டிய 5 முதல் 11 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 26.07.2022 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சுப்புராஜ் அவர்களும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 12 எதிர்மனுதாரர்கள் ஒருதரப்பாக்கப்பட்டும் இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் இம்மனுவின் 6 முதல் 12 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 5 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்த்து உத்தரவிடவேண்டி கட்டளை 1 விதி 10(2) பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம் :–</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். மேற்படி 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப் பிரிவினைகக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் கோரி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

மேற்படி அசல் வழக்கில் 20வது ஆக காட்டப்பட்டுள்ள தாவா சொத்து சம்பந்தமாக 12ம் எதிர்மனுதாரருக்கு இந்த 6ம் எதிர்மனுதார் 06.06.2005ம் தேதிய கிரையம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையம் அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2181/2005 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி கிரைய ஆவண அடிப்படையில் 12ம் எதிர்மனுதார் தன் மீதும் 1ம் எதிர்மனுதார்/வாதி மீதும் அருப்புக்கோ்டை டி.மு.கோர்ட்டில் ஓ.எஸ்.267/2009 என்ற அசல் வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றும், மேற்படி அசல் வழக்கில் காட்டப்பட்டுள்ள 2வது மற்றும் 7வது தாவா சொத்து சம்பந்தமாக 15.08.1999ம் தேதியில் பாகப் பிரிவினை குறிப்பு பத்திரம் 6, 9ம் எதிர்மனுதாருக்கு 10, 11, 12 எதிர்மனுதார்கள் ஏ செடியூல் சொத்தாக பிரித்து கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி தாவா சொத்து சம்பந்தமாக ஓ.எஸ்.267/2009 என்ற அசல் வழக்கில்

சாமிநாயக்கர் தெருவில் அமைந்திருக்கும் வீட்டு கதவு எண்ணை மாற்றி பாம்பலம்மன் கோவில் தெரு என்றும் குறிப்பிட்டுள்ளனர் என்றும், ஆகையால் மேற்படி அசல் வழக்கில் அவசியதரப்பினராக 6 முதல் 12 எதிர்மனுதார்களை சேர்ப்பது அவசியமாய் இருக்கிறது என்றும், எனவே மேற்படி அசல் வழக்கில் அவசியதரப்பினராக 6 முதல் 12 எதிர்மனுதார்களை 5 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் :–</u>

மனுதார் குறிப்பிடும் 06.06.2005ம் தேதியிட்ட பத்திரத்தில் தாவா 20 வது லக்கம் சேரவே இல்லை. அதேபோல் தாவா சொத்துக்களும் மனுதார் குறிப்பிடும் 15.08.1999ம் தேதிய பாகப்பிரிவினை குறிப்பிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், தானும், தன் சகோதரரும் சேர்ந்து தங்கள் குடும்ப சொத்துக்களை பிரிவினை செய்யக்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தங்கள் குடும்ப சொத்துக்களுக்கும் மனுதார் தற்போது புதிதாக சேர்க்கக் கோரும் 6 முதல் 12 எதிர்மனுதார்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், 6 முதல் 12 எதிர்மனுதார்கள் தங்கள் பெரியப்பாவின் வாரிசுகள் ஆவார்கள் என்றும், தங்கள் பெரியப்பா குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் அவர்கள் தனித்தனியே அனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்திற்கும் புதிதாக சேர்க்கக்கோரும் எதிர்மனுதார்களுக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றும், மேலும் 7, 8 எதிர்மனுதார்களை எந்த அடிப்படையில் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனுதார் மனு தாக்கல் செய்துள்ளார் என்பதற்கும் அபிடவிட்டில் எவ்வித விளக்கமும் இல்லை.

மனுதார் அபிடவிட்டு பாரா (3)ல் கூறியுள்ள ஓ.எஸ்.எண்.267/2009 வழக்கில் கண்டுள்ள சொத்திற்கும் தாவா சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், மனுதார் வேண்டுமென்றே வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மாதிரி மனுக்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனு வீணானது. அலைக்கழிவானது. எனவே மனுதாரின் மனுவானது செலவுடன் தள்ளுபடிக்குரியதாகும்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**6.** தற்போது இம்மனுவானது அனுமதிக்கத் தக்கதா, இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

**7.** மேற்படி அசல் வழக்கானது 1, 2 எதிர்மனுதாரர்களால் தாவா 1 முதல் 24 லக்க சொத்துக்களில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்குரிய 4 ல் 3 பாகத்தை ஒதுக்கீடு செய்யக்கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர்கள் தரப்பில் மேற்படி அசல் வழக்கில் 20 வதாக காட்டப்பட்டுள்ள தாவா சொத்து சம்மந்தமாக 12 ம் எதிர்மனுதாருக்கு இந்த 6 ம் எதிர்மனுதார் 06.06.2005 ம் தேதி கிரையம் கொடுத்துள்ளதாகவும், அது அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2181/2005 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 12 ம் எதிர்மனுதார் 1 ம் எதிர்மனுதார் மீது அருப்புக்கோட்டை டி.மு. கோர்ட்டில் ஓ.எஸ்.267/2009 என்ற வழக்கு

தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் 2 மற்றும் 7 வது சொத்து சம்பந்தமாக 15.08.1999 ம் தேதியில் பாகப்பிரிவினை குறிப்பு பத்திரம் 6, 9 எதிர்மனுதார்களுக்கு 10, 11, 12 எதிர்மனுதார்கள் பிரித்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி தாவா சொத்து சம்பந்தமாக ஓ.எஸ். 267/2009 என்ற வழக்கில் சாமி நாயக்கர் தெருவில் அமைந்திருக்கும் வீட்டு கதவு எண்ணை மாற்றி பாம்பலம்மன் கோவில் தெரு என குறிப்பிட்டுள்ளதாகவும், எனவே மேற்படி 6 முதல் 12 எதிர்மனுதார்கள் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று கூறியுள்ளார். ஆனால் மேற்படி எதிர்மனுதார் தரப்பில் 06.06.2005 ம் தேதிய பத்திரத்தில் தாவா 20 வது லக்க சொத்து சேரவில்லை என்றும், அதேபோல தாவா சொத்துக்களுக்கும் 15.08.1999 ம் தேதிய பாக பிரிவினை குறிப்பிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி மனுதார் தரப்பில் மேற்படி மனுதாரின் கோரிக்கையை நிரூபிக்கும் வகையில் 06.06.2005 ம் தேதியிட்ட கிரைய பத்திரமோ, 15.08.1999 ம் தேதிய பாகப்பிரிவினை குறிப்புரையோ இம்மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி தாவா வழக்கானது 1, 2 எதிர்மனுதார்களுக்கும் மேற்படி மனுதார் மற்றும் 4, 5, 6 எதிர்மனுதார்களுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பாகம் பிரிப்பது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி சொத்துக்களில் பங்கு உரிமையுள்ள நபர்கள் மட்டுமே மேற்படி வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்கப்பட முடியுமே தவிர மற்ற நபர்களை தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை. மேலும் மேற்படி 7 மற்றும் 8 எதிர்மனுதாரர்களை ஏன் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்பதற்காக மேற்படி மனுவில் எவ்வித முகாந்திரமும் குறிப்பிடவில்லை. மேலும் மேற்படி மனுதார் மேற்படி 20 வது லக்க

சொத்தை 06.06.2005ம் தேதி மேற்படி 6ம் எதிர்மனுதார் 12ம் எதிர்மனுதாருக்கு கிரையம் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் மேற்படி மனுதார் மேற்படி அசல் வழக்கில் 22.08.2011ம் தேதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் அவ்வாறு கிரையம் செய்ததாகவோ அல்லது 15.08.1999ம் தேதி பாக பிரிவினை குறிப்பு எழுதிக் கொண்டதாகவோ கூறவில்லை. எனவே மேற்படி மனுதார் மேற்படி அசல் வழக்கின் விசாரணையை கால தாமதப்படுத்தும் எண்ணத்திலேயே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிய வருகிறது. எனவே 6 முதல் 12 எதிர்மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் தீர்வு காணப்படுதற்கு அவசியமான தரப்பினர்களாக இல்லாத நிலையில் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.1/2020 இன்
மு.வ.எண்.46/2012
உத்தரவு நாள் 12.08.2022